**தலைப்பு 272 – குருணாகல் மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

குருணாகல் மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குருணாகல் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குருணாகல் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன்

அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | | |
| | | ரூபா | | | |
| (I) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | 168,739 | விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமாயின் ஆரம்ப அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும் முழுமையான அறிக்கை இழப்பு நட்டம் ஏற்பட்ட தினத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 08 பிரதேச | ஆரம்ப மற்றும் முழுமையான அறிக்கை உரிய நேரத்தில் சமர்ப்பிக்க தாமதம் ஏற்பட்டிருந்தமையால் இவ்வாறான தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணித்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செயலகங்களுக்குரிய 08 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அவ்வாறே இந்த வாகனங்கள் மூன்றிற்கும் உரிய இழப்புக்கள் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 137(i) மற்றும் (v), 215(i) மற்றும் 237(iii) | 2,485,911 | பண்டுவாஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகத்தால் வழங்கல்கள் கிடைத்திருக்காத போது எழுதப்பட்ட 22 காசோலைகள் உரிய நபர்களுக்கு விநியோகிக்கப்படாமல் 35 நாட்கள் முதல் 43 வரையான காலம் வைக்கப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்ட சந்தை வசதிகளின் அடிப்படையில் பொருட்கள் கட்டளையிட்டு பெற்றுக்கொள்ளும் போது வசதியீனங்கள் ஏற்பட்டிருந்தமையால் கொடுப்பனவு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்ட நிதியேற்பாடு மற்றும் கட்டுநிதி ஆண்டின் இறுதியளவில் பயன்படுத்த வேண்டியிருந்தமை இதற்கு காரணமாகும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வழங்கல்கள் கிடைத்த பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (II) | அரச நிதிச் சுற்றறிக்கை<br>-------------------------- | | | | |
| (அ) | 2021 சனவரி 11 ஆந் திகதிய MF/NPD/01/ 2021 ஆம் இலக்கம் மற்றும் 2021 பெப்ரவரி 10 ஆந் திகதிய MF/NPD/01/ 2021(i) ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | - | எதிர்பார்க்கப்பட்ட துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் 05 பிரதேச செயலகங்களால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக மொத்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டு செலவினத்தில் 41 சதவீதம் வழங்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள 13 துறைகளை மேவுகை செய்யும் வகையில் | செயற்திட்ட முன்மொழிவு சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதன் காரணமாக சகல துறைகளையும் மேவுகை செய்ய முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நிதியேற்பாடு ஒதுக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 சனவரி 11 ஆந் திகதிய நிதி அமைச்சு செயலாளரின் MF/NPD/01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை -------------------------- | | | | |
| .i | 2 ஆம் பந்தி | 10,806,441 | பாராளுமன்ற உறுப்பினர்களின் முழுமையான நிதியேற்பாட்டில் 50 சதவீதம் அதாவது ஆகக்குறைந்தது ரூபா 05 மில்லியன் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக (நிர்மாணம்) ஒதுக்கப்படாமல் பண்டுவஸ்நுவர (மேற்கு), பமுணாகொட்டுவ மற்றும் அலவ்வ பிரதேச செயலகங்களின் அறநெறி பாடசாலை மற்றும் விகாரை அபிவிருத்தி மற்றும் பதிவு செய்த சங்கங்களுக்காக பொருட்களை பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 10,806,441 தொகை அதாவது 72 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. | நிதியேற்பாட்டுத் தொகையில் ஆகக்குறைந்தது 50 சதவீதம் நிர்மாண செயற்திட்டம் மற்றும் ஆகக்கூடியது 50 சதவீதம் சமூக, பொருளாதார மற்றும் அத்தியவசிய அபிவிருத்திகளை இலக்காககக் கொண்டு கொள்வனவு செய்தல் செயற்திட்டத்தின் முன்மொழிவை தெரிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| ii. | 2.4 ஆம் பந்தி | 2,277,068 | பிரதேச செயலகப் பிரிவில் சனத்தொகை, வறுமை மற்றும் நில அளவு என்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பன்முகப்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரகளின் நிதியேற்பாடு பகிர்ந்து | ஒரு ஆண்டிற்குள் ஒதுக்கப்படுகின்ற நிதியேற்பாட்டுத் தொகை போதியளவில் இல்லாமையால் பல்வேறு உறுப்பினர் நிதியேற்பாட்டின் கீழ் இந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மக்களினால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செல்லும் வகையில் செயற்திட்டம் தெரிவு செய்து அமுல்படுத்தப்படாமல் 2021 ஆம் ஆண்டின் போது 04 பிரதேச செயலக பிரிவுகளில் 37 சங்கங்களுக்கு 80 சந்தர்ப்பங்களின் போதும் மற்றும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 27 சங்கங்களுக்கு 27 சந்தர்ப்பங்களின் போது பொருட்கள் ஒரே சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | காரணமாக ஒரே சங்கத்திற்கு பொருட்கள் வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (III) | ஏனைய சுற்றறிக்கைகள் ------------------------- | | | | |
| (அ) | பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் MDTF/Trg/mgt /03(i) ஆம் பந்தி மற்றும் 2020 நவம்பர் 25 ஆந் திகதிய கடிதத்தின் இலக்கம் 03(அ) பந்தி | - | ஆகக்குறைந்த கல்வி மட்டம் 08 ஆம் தரம் பூர்த்தி செய்யப்படாத 03 விண்ணப்பதாரர்களுக்கும், உரிய தகைமைகளை விட உயர்ந்த தகைமைகளான க.பொ.தராதர (சா.தரம்) சித்தியடைந்த 11 விண்ணப்பதாரர்களுக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக குளியாப்பிட்டி (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் சேவைக்காக பல்நோக்கு அபிவிருத்தி பயிற்சி பெறுனர்களாக சேர்க்கப்பட்டிருந்தனர். | க.பொ.தராதர (சா.தரம்) சித்தியடைந்தமை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் தற்காலிக பயிற்சி நடவடிக்கைகள் கைவிடப்பட்டதுடன் பெறப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் இந்த பயிற்சி பெறுனர்களை மீண்டும் சேவைக்கு அழைத்து நிலுவைப் படியும் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க விண்ணப்ப தாரர்கள் சேர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி வழிகாட்டிக் கோவை 2021/1 | - | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டமைய | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட செயற்திட்ட நலனாளிகளின் தகவல்கள் அவர்களின் களக் குறிப்பு புத்தகங்களில் | பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வழிகாட்டல் கோவைகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ால் நலன்பெறுனர்கள் தொடர்பாக சகல தகவல்களும் அவர்களுக்குரிய கள ஏடுகளில் குறிப்பிடப்பட்டு தேவையான போது கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதில் ஒவ்வொரு தினத்தின் போதும் நலனாளிகளின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்குரிய குறிப்புக்கள் பேணிச் செல்ல வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | குறிப்பிடுமாறும், பின்தொடர் நடவடிக்கைகளை செய்வதற்குரிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது. | நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | காணி ஆணையாளர் நாயகத்தின் 2018 மார்ச் 25 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை - | கிராம உத்தியோக்தர் களால் தமது பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக இருவார அறிக்கைகளின் மூலம் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் 04 பிரதேச செயலகங்களில் கிராம உத்தியோகத்தர்களின ால் அது தொடர்பான அறிக்கை பிரதேச செயலாளருக்கு வழங்கப்படாதிருந்தது டன் அவ்வாறான நிர்மாணங்கள் இன்றிய சந்தர்ப்பங்களில் வெற்று அறிக்கை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக கிராம உத்தியோகத்தர் களினால் செய்யபட வேண்டிய அறிக்கையிடல் உரிய பிரகாரம் பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் தொடர்பாக கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையி ன் நியதிகளின் பிரகாரம் கிராம சேவை உத்தியோகத் தர்களால் இருவார அறிக்கை குறித்த பிரகாரம் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நெல் கொள்வனவு செய்தல் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகள் என்ற ஏனைய செலவின விடயத்திற்காக வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடு வழங்கப்படாதிருந்ததுடன் முறையே ரூபா 65,000,000 மற்றும் ரூபா 100,000,000 ஆக குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் எடுக்கப்பட்ட நிதியேற்பாடு இந்த இரண்டு செலவின விடயங்களுக்காக பெறப்பட்டிருந்ததுடன் அதில் ஆண்டில் செலவினங்கள் செய்யப்பட்டதன் பின்னர் ரூபா 63,591,862 மற்றும் ரூபா 94,565,000 நிதியேற்பாடு ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதியேற்பாடு உரிய பிரகாரம் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுத்த விவசாயிகளினால் அரசாங்கத்திற்கு நெல் விற்பனை செய்வதற்கு காண்பித்த விருப்பமின்மை மற்றும் தனியார் துறைகளுக்கு இடையூறின்றி நெல் விற்பனை செய்வதற்கு முடியுமாகவிருந்தமை மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்கு வழங்கப்பட்ட ரூபா 100 மில்லியனில் ரூபா 5 மில்லியனை பயன்படுத்தி 20 சொப்பர் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கிடைக்கின்ற நிதியேற்பாட்டை இயலுமான வரை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செலவின விடய இலக்கம் 272-1-2-1001 மற்றும் 272-1-2-1002 என்பவற்றிற்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 617,000 மற்றும் ரூபா 773,000 தொகைகள் மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த இரண்டு செலவின விடயங்களின் சேமிப்பு முறையே ரூபா 1,699,600 மற்றும் ரூபா 1,962,214 காணப்பட்டமையால் அந்த சேமிப்பு அதிகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 275 சதவீதம் மற்றும் 254 சதவீதம் ஆனமையால் எந்தவொரு தேவையும் இன்றி நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதியேற்பாட்டை மாற்றும் போது தேவையினை கணிப்பிட்டு அனுப்புமாறு காண்பிக்கப்பட்ட போதிலும் உரிய பிரகாரம் பிரதேச செயலகங்களால் இதனை நிறைவேற்றாமையால் இந்த குறைபாடு ஏற்பட்டிருந்தது. | மதிப்பீட்டு நிதியேற்பாடு உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தமது நிதியாண்டிற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்து செயற்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியிருந்த போதிலும் அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல்திட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக 15 அமைச்சுக்களிலிருந்தும் 08 திணைக்களங்களிலிருந்தும் கிடைத்த நிதியேற்பாடுகளில் ரூபா 1,255.751,480 நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 15 அமைச்சுக்களிலிருந்தும், 08 திணைக்களங்களிலிருந்தும் கிடைத்த நிதியேற்பாடுகளில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் வீட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டமை, நடமாடும் வரையறை ஆண்டு முழுவதும் அவ்வவ்போது விதிக்கப்பட்டமை, ஊழியர்களை ஒன்று சேர்த்தல் குறைக்கப்பட்டமை, பிரயாண செலவினம் வரையறுக்கப்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தமைக்கு தாக்கமளித்திருந்தது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங் களிலிருந்து கிடைக்கின்ற நிதியேற்பாட்டினை காலநேரத்துடன் பெற்றுக் கொள்வதற்காக உரிய நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிக்க வேண்டியிருந்த துடன் கிடைக்கின்ற நிதியேற்பாடுகளை இயலுமான வரையில் பயன்படுத்து வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 அமைச்சுக்களிலிருந்தும் 06 திணைக்களங்களிலிருந்தும் கிடைத்த நிதியேற்பாடுகளின் கூட்டுமொத்தமான ரூபா 14,896,459 நிதியேற்பாட்டில் 100 சதவீதமும் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | நிதியேற்பாட்டை திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்காமையால் மற்றும் உரிய நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தாமையின் காரணமாக தாக்கமளித்திருந்தது. | அமைச்சு மற்றும் திணைக்களங்களில் இருந்து கிடைக்கின்ற நிதியேற்பாடுகளை செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நான்கு பிரதேச செயலகங்களில் மரணமடைந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 396,674 கடன மீதி அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் ரிதீகம பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தரின் கடன் மீதியான ரூபா 211,131 தொகை 17 வருடங்கள் 07 மாதங்கள் ஆன காலத்திலிருந்து காணப்பட்டது. அந்த கடன் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்படுகின்ற ரூபா 396,674 கடன் மீதியை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதியை அறவிடுவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் செயற்திறனாக எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்டச் செயலகம் மற்றும் அதற்குரிய 22 பிரதேச செயலகங்களில் கணக்கு இலக்கம் 6000-0-0-16-0-42 ஆம் இலக்கத்தின் கீழ் ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 80,396,403 தொகை 02 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மாவட்ட செயலகம் மற்றும் 22 பிரதேச செயலகங்களில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடையிலாக காணப்படுகின்ற நிறுத்தி வைத்தல் பணத்தில் ரூபா 24.6 மில்லியன் விடுவிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டமையால் மிகுதி ரூபா 59.2 மில்லியன் கட்டுநிதி கிடைத்த பின்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான வைப்பு மீதி தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதான நோக்கங்களுக்கிடையே துப்பாக்கி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல் உள்ளடங்கியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது 30 பிரதேச செயலகங்களுக்குரிய 726 துப்பாக்கிகளுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் துப்பாக்கிகளின் வருடாந்த அனுமதிப்பத்திரம் 2022 ஆம் ஆண்டின் போது புதுப்பிக்கப்பட்டுள்ளது. | வருடாந்தம் துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் செழிப்பான உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் இலக்கம் 1345- மீகஸ்பிட்டிய பிரிவில் இனிப்பு பண்டங்கள் மற்றும் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 3,223,218 தொகை செலவிடப்பட்டு இந்த பெறுமதியில் ரூபா 2,507,218 பெறுமதியான கிராமங்களுக்காக 02 வீதிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் அந்த 02 வீதிகளும் நேரடியாக நலன்கள் பெறுகின்ற மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 06 ஆக இருந்தமையால் அதிக நலனாளிகளின் எண்ணிக்கையுடன் கிராம வீதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த இரண்டு வீதிகளும் அனேகமானவை உடைந்த வீதியாக இருந்தமையால் அத்தியவசிய அபிவிருத்தி செயற்பாடுகளில் இந்த வீதி அமைக்கப்பட்டிருந்ததுடன் இந்த வீதியின் இரு பக்கமும் அதிக எண்ணிக்கையிலான குடும்பங்கள் வசித்து வருகின்றனர். | செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது அதிக நலன்களை பெறக் கூடிய முறையில் செயற்திட்டம் தெரிவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இடர் முகாமைத்துவு அமைச்சினால் ரூபா 2,108,552 செலவில் 2015 ஆம் ஆண்டின் போது நிக்கரவெரட்டி பிரதேச செயலகப் பிரிவில் திம்பிரியாவ, வந்துருஸ்ஸ கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் கிணற்றில் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதாக இருந்தமை 2021 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் இந்த பிரதேசத்தில் குடியிருக்கின்ற 20 குடும்பங்களுக்கான நீர்த் தேவையினை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் கிணறு நிர்மாணித்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | குடிநீரை பூர்த்தி செய்வதற்காக அந்த நலனாளிகள் முயற்சி எடுப்பதாக சுத்திகரிக்கும் தொகுதியொன்றை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்கள் அளவில் இந்த பிரதேசத்திற்கு ஆண்டு முழுவதும் மழை கிடைத்தமையால் நீர் மூலங்கள் அதிகரித்தமையால் இந்தக் கிணறுகளை பயன்படுத்துதல் குறைவடைந்துள்ளது. | செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாகவும், நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலும் அமுல்படுத்துதல் வேண்டும். |
| (இ) | பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் செழிப்பான உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,109,616 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கோன்கஹமூல மீகஸ்பிட்டிய வீதி ஏனைய எந்தவொரு வீதியையும் தொடர்புபடுத்தாமல் தனியார் காணியொன்றுடன் முடிவடைந்திருந்ததுடன் வீதியின் மொத்த பெறுமதியில் ரூபா 435,987 செலவில் நிர்மாணிக்கப்பட்ட தெற்கு பக்க வடிகாண் மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது. | வீதி முடிவடைவதிலுள்ள காணி, உரிமையாளர் மூன்று பேருக்குரிய தனிப்பட்ட காணியாக இருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த வீதிக்கு வடிகாண் முறைமை மற்றும் மதகுகளை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாகவும், நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலும் அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 08 பிரதேச செயலகப் பிரிவில் ஆண்டில் செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சப்பிரிகமக் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் | அபிவிருத்தி முன்மொழிவுகள் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளும் போது முறையான வகையில் சகல பொருளாதார நோக்கங்களையும் தெளிவுபடுத்தும் வகையில் | செயல்திட்டத்தை நிறைவேற்றும் போது பொருளாதார ரீதியில், செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்மான |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தில் மொத்த செயற்திட்டம் 1,159 இற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 905,975,386 ஆகும். அதில் ரூபா 802,594,963 தொகை அதாவது 89 சதவீத செலவில் வீதி நிர்மாணத்தை உள்ளடக்கிய துறைகளுக்கு மாத்திரம் செலவிடப்பட்ட பணமாக இருந்தமையால் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சினால் 2019 திசெம்பர் 06 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ‘‘நாட்டை உருவாக்கும் செழிப்பின் தொலைநோக்கு’’ கொள்கை வெளியீட்டின் பிரகாரம் கிராம அபிவிருத்தியின் மூலம் பிரதேச முரண்பாடுகளை குறைத்து கேந்திர மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் சகல பொருளாதார இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | பெற்றுக் கொள்வதற்கு உரிய கிராமிய குழுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையிலும் எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் நிறைவேற்றுதல் வேண்டும். |
| (உ) | கிராமிய விளையாட்டு மைதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2018 இன் கீழ் குளியாப்பிட்டி (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் களஹிட்டியாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் சென்டிபோட் வத்த விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,936,188 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் விளையாட்டு மைதானம் காடுகள் வளர்ந்து பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது. | குளியாப்பிட்டி பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்ட இந்த விளையாட்டரங்கின் குறைபாடுகளை பூர்த்தி செய்யுமாறு பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல்திட்டத்தை நிறைவேற்றும் போது பொருளாதார ரீதியில், செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்மான முறையிலும் எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பம்புணாகொட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் கட்டுபொத்த பொலிஸ் அமைந்துள்ள இடத்தில் கருங்கல்லுடான காணியொன்றில் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப பணிகளான மண் நிரப்புதல் 41 சதவீதம் மேற்கொண்டு காணியைச் சுற்றி வலை வேலி அமைத்து அந்த பணிகளுக்காக ரூபா 1,470,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. மண் முழுமையாக நிரப்பப்படாமையின் காரணமாக மற்றும் இந்த இடத்தில் 500 மீற்றர் தூரத்தில் இன்னுமொரு வசதிகளுடனான விளையாட்டரங்கு காணப்பட்டமையின் காரணமாக இந்த விளையாட்டரங்கு விளைவற்றுக் காணப்பட்டது. | விளையாட்டரங்கில் மண் நிரப்பி பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைக் உட்படுத்துமாறு வாரியபொல பிரதேச சபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதில் பிரச்சினைகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (எ) | சேதன பசளை உற்பத்தி செய்வதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து 2021 ஒக்தோபர் 01 ஆந் திகதி ரூபா 100,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 5,404,000 செலவில் கூறுகளாக்கும் 20 இயந்திரங்கள் (மல்ரி சொப்பர்) பெறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் 06 இல் இயந்திரங்கள் கிடைத்திருந்த போதிலும் அவை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும், ரூபா 94,596,000 நிதியேற்பாடு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சேதனப் பசளை உற்பத்திக்கு தேவையான 56 மல்ரிசொப்பர் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 20 இயந்திரங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக எஞ்சிய நிதியேற்பாடான ரூபா 94,596,000 திறைசேரியின் தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிதியேற்பாடுகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெறக்கூடிய வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 03 பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 11,185,891 செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிலையில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதியேற்பாடு இல்லாமையினால் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டு சப்பிரிகமக் செயற்திட்டத்தின் கீழ் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவில் 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் குழாய் நீர் முறைமைக்காக 2020 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 5,424,036 தொகை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 29 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு நீர் செயற்திட்டங்களின் குழாய்களை பதிக்கும் செயற்பாடுகளை விரைவாக அமைக்குமாறு அவ்வவ்போது அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கோபெய்கனே பிரதேச செயலகப் பிரிவில் 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக கிராமிய குழுக்களினால் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டிய ரூபா 3,000,000 பெறுமதியான மூன்று நீர்க் குழாய் பதிக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | நீர்க் குழாய் உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையின் அடிப்படையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

## 3.4 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றத்தை பெறாதிருந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட பின்தங்கிய கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் சீவனோபாயத்தை கட்டியெழுப்புவதற்காக உழுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கை செயற்திட்டம் 10 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திலிருந்து எதிர்பாரக்கப்பட்ட மொத்த உழுந்து மற்றும் பயறு விளைச்சலான 256,200 கிலோகிராம்களில் 52,873 கிலோகிராம் கிடைக்கப் பெற்றமையால் அது 20 சதவீதத்தை விட குறைந்த விளைச்சலாக இருந்தது. இதன் பிரகாரம் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த விளைவை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | 2021 இன் பெரும்போகம் ஆரம்பிக்கும் போது நிதியேற்பாடு கிடைக்கப்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் போது அதிகளவான மழையின் காரணமாக இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்த்த விளைவுகளை பெறக்கூடிய வகையிலும் நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையிலும் அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) அரச பாதுகாப்பு, உள்நாட்டலுல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சினால் 2020/2021 பெரும்போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்காக ரூபா 50,000,000 தொகை 2021 பெப்ரவரி 16 ஆந் திகதி குருணாகல் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,408,137 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணிக்காக பயன்படுத்தப்படாத ரூபா 48,591,862 அதாவது மொத்த நிதியில் 97 | நெல் கொள்வனவு செய்யும் போது நெல் சந்தைப்படுத்தும் சபையினால் விவசாயிகளிடமிருந்து அதிக விலையில் நேரடியாக நெல்லை கொள்வனவு செய்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை ஊடாக நெல்லை கொள்வனவு செய்யும் போது அரசாங்கத்தின் வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு நிதியினை பெற்றுக் கொள்வதற்காக அலுப்புதல் போன்ற காரணங்களினால் | வழங்கப்பட்ட நிதியேற்பாடு களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் பயன்படுத்தப்படாமல் 2021 யூன் 07 ஆந் திகதி மீண்டும் திறைசேரிக்கு வழங்கப்பட்டிருந்தது. | நெல் கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது. | |

## 3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது.

அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிராமிய ரீதியில் நிர்மாணிக்கப்பட வேண்டிய வாராந்த சந்தை, விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் வீடுகளுக்காக சூரிய பெனலை பொருத்துதல் போன்ற இரண்டு கூறுகளின் எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் 49 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் இந்த கூறுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்கவில்லை. இதில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு அல்லது ஆண்டின் இறுதியில் பூர்த்தியான செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பெறமதி என்பன காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வரிசை அமைச்சின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கூறுகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தமை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நிதியேற்பாட்டை ஒதுக்கி அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) மேலும் உள்நுழைவு வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் கிராமிய நீர் வசதிகள் வழங்கல் போன்ற இரண்டு கூறுகளினதும் பூர்த்தி சதவீதம் 50-75 இற்கு இடையிலும், விளையாட்டு மைதானம், சமய நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி போன்ற 03 கூறுகளினதும் | வரிசை அமைச்சின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றல் குறிகாட்டிகளில் செயல் முன்னேற்றம் தயாரிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நிதியேற்பாட்டை ஒதுக்கி அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பூர்த்தி சதவீதம் 75-89 இற்கு இடையிலும், சுகாதார வசதிகளை வழங்குல், வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் ஏனைய மூன்று கூறுகளினதும் பூர்த்தி சதவீதம் 90-100 இற்கு இடையிலும் காணப்பட்ட போதிலும் இந்த கூறுகள் எதுவும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்காமை மற்றும் செயலாற்றல் குறிகாட்டிகளின் பூர்த்தி சதவீதம் தயாரிப்பதற்கு பூர்த்தி செயல்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு எனவும் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினம் எவ்வளவு எனவும் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |

## 3.6 உள்நாட்டு நிதியத்தில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் முதுல்ல அணை மற்றும் கொட்டகிம்புலா கட அணை நிர்மாணம் இலங்கை விமான படைக்கு கையளிக்கப்பட்டு அதில் எஞ்சிய 94 விடயங்களுக்குரிய 2,506 பொருள் அலகுகள் கணக்காய்வு திகதி வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது. | செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் வரை இந்த பொருட்கள் களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. | களஞ்சியத்தில் காணப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிக்கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 317 – ஒத்தொட்ட திவுல்லேவ பிரிவில் பிரதேச செயலாளருக்குரிய காணியொன்று சில தனி | இது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக நிக்கரவெட்டி பிரதேச | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நபர்களினால் பல வருடங்களுக்கு முன்பிருந்து அனுமதியற்ற வகையில் குடியிருந்து வருவதுடன் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கோ அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 07 பிரதேச செயலகங்களில் 9,486 காணி ஹெக்டேயர், 29 கட்டிடங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பன 02 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையிலான காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விளைவற்றுக் காணப்படுகின்ற ஆதனங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற 05 நடமாடும் விற்பனைக் கொட்டகைகள் பயன்படுத்தப்படாமல் நிக்கரவெட்டி பிரதேச செயலக வளவில் விளைவற்றுக் காணப்பட்டது. | நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய 05 நடமாடும் விற்பனைக் கொட்டகைகளை பழுதுபார்த்து பிரதேச செயலக வளவில் வைக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | பயன்படுத்தப்படாத 10 அடி நீளமான 25 எஸ்பெஸ்டஸ் சீட் பயன்படுத்தப்படாமல் அலவ்வ பிரதேச செயலக வளவில் நீண்டகாலமாக குவித்து வைக்கப்பட்டிருந்தது. | மாகாண முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேலதிக பொருள் வழங்கலாக இந்த 25 எஸ்பெஸ்டஸ் சீட்டுக்களை பௌத்த நிலையத்திற்கு எடுத்துச் செல்லுமாறு அறிவிக்கப்பட்ட போதும் எடுத்துச் செல்லப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - |
| (உ) | இப்பாகமுவ மற்றும் நிக்கரவெட்டி பிரதேச செயலகங்களில் 02 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 02 மோட்டார் சைக்கிள்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | நிக்கரவெட்டி பிரதேச செயலகத்தில் மோட்டார் சைக்கிளை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளதுடன் இப்பாகமுவ பிரதேச செயலகத்தின் மோட்டார் சைக்கிள் சேவையை விட்டுச் சென்ற கிராம உத்தியோகத்தர் பயன்படுத்தி கையளிக்கப்பட்ட போதும் சட்டரீதியான உரித்து அவரினால் கையொப்பம் | விளைவற்று காணப்படுகின்ற ஆதனங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடாமல் கையளிக்க முடியாதிருந்தமையால் இது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | |
| (ஊ) | சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் நிக்கவெரட்டி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட டிறக்டர் மற்றும் பௌசர் வண்டிகள் 2014 ஆம் ஆண்டிலிருந்தும், மாஹோ பிரதேச செயலகத்திற்கு இடர் முகாமைத்துவ அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட இரண்டு தண்ணீர் பௌசர்களும் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பாதுகாப்பின்றி காணப்பட்டது. | பிரதேச செயலகங்கள் இரண்டிற்குமுரிய டிறக்டர் மற்றும் பௌசர் வண்டிகளை பழுதுபார்ப்பதற்காக நிதியேற்பாடு கோரப்பட்ட போதும் கிடைத்திருக்கவில்லை. | விளைவற்று துருப்பிடிக்கும் நிலையில் காணப்படுகின்ற வாகனங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | குருணாகல் பிரதேச செயலகப் பிரிவில் நகர எல்லையில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான 26 ஆதனங்கள், குருணாகல் மாநகர சபைக்கு கையளிக்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் அவற்றை முறையாக கையளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்த ஆதனங்களில் அனேகமானவை வணிக நோக்கத்திற்காக கையேற்பதற்காக கோரப்பட்டிருந்ததுடன் இவைகள் நீண்டகால வாடகையின் அடிப்படையில் வழங்கி அரசாங்கத்திற்கு வருமானத்தை உழைக்கக் கூடியதாக இருக்கும் போது இவ்வாறு மாநகர சபைக்கு கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | குருணாகல் மாநகர சபைக்கு கையளிக்கக் கூடிய ஆதனங்களை கையளிப்பதற்கும், ஏனைய ஆதனங்களை நீண்ட கால வாடகைக்கு வழங்கும் இயலுமை காணப்படுவதால் அதற்காக மிகுதி செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்திற்குச் சொந்தமான பெறுமதியான ஆதனங்களை கையளிக்கும் போது அது தொடர்பாக ஆராய்ந்து கையளிக்க வேண்டிய ஆதனங்கள் மாத்திரம் முறையான பிரகாரம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | குருணாகல் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஹக்குறுகுட்டியாவ கட்டுவாவேவத்த எனும் பெயருடைய 169.77 பேர்ச் அரசாங்கத்தின் காணி அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் பிடித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களை அகற்றுவதற்கோ அல்லது காணியை சட்டரீதியாக்குவதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற வகையில் குடியிருக்கின்ற நபர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைக் எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு சொந்தமான காணியில் அனுமதிற்ற குடியிருப்பாளர்கள் பிடித்து வைத்தல் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | மாஸ்பொத்த பிரதேச செயலகப் பிரிவில் ரத்கரவ்வ ஆயவந்தம கிராமத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான மேட்டு நிலத்துடனான காணி பல வருட காலம் முதல் கணிசமான அளவில் அனுமதியற்று கிரவல் அகழ்வு மேற்கொண்டதன் காரணமாக சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக புவிச்சரிதவியல், சுரங்கங்கள் பணியகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, மாகாண சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரமின்றி அனுமதியற்ற கிரவல் வெட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் படிப் பத்திரங்கள் மூலம் குடியிருப்பாளர்கள் சிலருக்காக இந்த காணி வழங்கப்பட்டிருந்தது. அரசாங்கத்திற்கு எந்தவொரு நலனையும் பெறாமல் வெளித்தரப்பினரால் கிரவல் விற்பனையின் மூலம் கணிசமான வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எந்தவொரு அனுமதியற்ற கிரவல் வெட்டுதலும் தற்போது மேற்கொள்ளப்படாதிருந்த துடன் அனுமதியற்ற கிரவல் வெட்டுதலை மேற்கொள்கின்ற படிப் பத்திரங்கள் தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் காணிகளில் அனுமதியற்ற கிரவல் அகழ்வு தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.8 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் மதுல்ல அணை மற்றும் கொட்டக்கிம்புலாகட அணை என்பவற்றை நிர்மாணித்ததன் பின்னர் எஞ்சிய ரூபா 52,000 பெறுமதியான 56 சீமெந்து மூட்டைகள் 2020 மே 01 ஆந் திகதி களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 03 ஆந் திகதி பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தமையால் நட்டம் ஏற்பட்டிருந்தது. | அணை நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய சீமெந்தினை பயன்படுத்த முடியாத வகையில் கல்லாகியதன் காரணமாக நட்டம் ஏற்பட்டிருந்தது. | மிகுதி பொருட்களை குறித்துரைத்த காலத்தில் ஏனைய பணிகளுக்குக்கேனும் ஈடுபடுத்த வேண்டியிருந்த துடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சனாதிபதி செயலகத்தின் மூலம் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது அமுல்படுத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 241,462,756 நிதியேற்பாடுகளில் ரூபா 102,337,860 தொகையான 42 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டு 58 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. களத்தில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு இது தொடர்பாக அறிந்திருக்காமையின் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கமான உட்கட்டமைப்பு வசதிகள், சீவனோபாய அபிவிருத்தி மற்றும் இயலளவு அபிவிருத்தி ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒட்டுமொத்தமாக எடுக்கும் போது செயற்திட்டம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா நிலைமையின் காரணமாக கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தமை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கிராம மக்களை சந்திப்பதற்கு முடியாதிருந்தமை இதற்காக தாக்கமளித்திருந்தது. | கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பிரகாரம் நலனாளிகளுக்காக வழங்கப்படல் வேண்டும். |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருணாகல் மாவட்ட செயலாளரால் 2020 திசெம்பர் 21 ஆந் திகதிய HDM/SEVI/17/3 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பிரதேச செயலாளர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பிரதேச செயலகம் மற்றும் அலுவலக சூழலுக்கு பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக தற்போது அமுல்படுத்தப்படுகின்ற பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்தின் உதவியாளர்களை எதிர்காலத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக காண்பிக்கப்பட்ட போதும், ஆண்டின் இறுதி வரையிலும் அந்த ஆலோசனைகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்காக பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை எதிர்காலத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். | பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் களிடமிருந்து எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்று வதற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் 2015 யூலை 07 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MCII ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெற்றுச் செல்லல், சேவையிலிருந்து விலக்குதல் போன்ற சந்தர்ப்பங்களில் 2014/2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் கீழ் மோட்டார் சைக்கிள் பெற்றிருப்பாராயின் உத்தியோகத்தர் அதற்காக செலுத்தியிருக்கின்ற பணத்தை கழித்து மிகுதிப் பணம் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு செலுத்த | மோட்டார் சைக்கிள்களுக்காக பணத்தை அறவிடுவதற்காக எதிர்காலத்தில் சட்டரீதியான செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை நியதிகளுக்கு இணங்க சேவையில் ஈடுபட்டிருக்காத உத்தியோகத்தர் களிடமிருந்து மோட்டார் சைக்கிள்களுக்காக அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 03 பிரதேச செயலங்களில் அவ்வாறான காரணங்களின் அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருக்காத 10 உத்தியோகத்தர் களிடமிருந்து மோட்டார் சைக்கிளுக்கான உரிய ரூபா 1,159,360 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பமுணாகொட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் வல்கம்பத்துவ கோறளை 1201- வேதண்ட கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் திக்வெஹெர கிராமத்தில் இலக்கம் 47/19/1மு.பி.கு.1326 ஆம் இலக்க நில வரைபடத்தில் இலக்கம் 54 என்ற கொஸ்கெலய என்ற பெயருடைய நிலக்கூறு கையளித்தல் பத்திரம் உரிமையாளரினால் தனியார் தொலைத்தொடர்பு கோபுரமொன்றை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 யூலை 16 ஆந் திகதிய 2007/3(iii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய பகுதி மீண்டும் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. காணியை கையேற்று தொலைத்தொடர்பு கம்பனியுடன் நீண்ட கால வாடகை உடன்படிக்கை செய்யப்படாமையின் காரணமாக காணி உரிமையாளர் மற்றும் கம்பனிக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 7,000 | மிகுதி செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீதம் 145 மாதங்களுக்காக ரூபா 1,015,000 வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மாஹோ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 68 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 36 இற்கு காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்பட்டதுடன் கடந்த 03 ஆண்டுகளின் போது காட்டு யானைகளின் பாதிப்பிற்காக ரூபா 1,980,725 தொகை உயிர், ஆதனங்கள் மற்றும் பயிர்ச்செய்கை இழப்பாக செலுத்தப்பட்டிருந்தது.<br>எனினும், மின்சார வேலி அமைத்தல், இயற்கையான யானை வேலி அமைத்தல் போன்ற நிரந்தர தீர்வுகளை தயாரிப்பதற்கு அதிகாரத் தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சகல கிராம சேவகர் பிரிவிற்கும் மின்சார வேலி தொடர்பாக மக்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் பல்வேறு நிபந்தனைகளினால் 05 பிரிவுகள் தவிர ஏனைய பிரிவுகளில் மின்சார வேலி தொடர்பாக கோரிக்கைகள் கிடைத்திருக்கவில்லை. | காட்டு யானைகளினால் ஏற்படுகின்ற உயிர், ஆதனங்கள் மற்றும் பயிர் இழப்பீடுகள் தொடர்பாக எடுக்க வேண்டிய தடுப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | இப்பாகமுவ மற்றும் பன்னல பிரதேச செயலகப் பிரிவுகளில் அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தி முன்மொழிவுகளுக்காக காணிகளை கைப்பற்றும் போது முறையே 3,136 காணிக்கூறுகள் மற்றும் 52 கூறுகள் கைப்பற்றும் செயற்பாடுகள் 01 வருடம் முதல் 49 வருடங்கள் வரையான காலம் தாமதமடைந்திருந்தது. | காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணியினை கைப்பற்றும் போது முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு கைப்பற்றும் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | 10 பிரதேச செயலகங்களில் 207 ஓய்வூதிய தாரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 41,217,889 ஓய்வூதியத்தில் மேலும் ரூபா 22,685,025 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | ஓய்வூதியதாரர்களுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அவர்களின் ஓய்வூதியத்திலிருந்து தவணையாக அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதிய தாரர்களுக்காக செலுத்தப்பட்ட மேலதிக பணத்தை விரைவாக அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சினால் 2019 திசெம்பர் 06 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் | சகல செயற்திட்டங்களின் கோவைகளை பேணிச் செல்லல் பெறுகை முறையில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் நாரம்மல | செயற்திட்டத்தின் மேற்பார்வைக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் கள் மற்றும் பொருளாதார |

| | | | |
|---|---|---|---|
| | பந்தியின் பிரகாரம் சப்பிரிகமக் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் நாரம்மல மற்றும் பமுணாகொட்டுவ பிரதேச செயலகங்களினால் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட அந்த நிர்மாணங்களின் தாமதத்தின் காரணமாக கையில் பட்டியல்களை காணக் கூடியதாக இருந்தது. பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருக்கும் போது அவர்கள் இவ்வாறான அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கியிருக்க வில்லை. | பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் பமுணாகொட்டுவ பிரதேச செயலகத்திற்கான செயற்திட்ட அளவினை வழங்குவதற்கு வாரியபொல பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் எந்தவொரு பதிலும் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் பணிப் பொறுப்புக்களை சரியாக இணைத்து செயற்திறனாக நிறைவேற்று வதற்காக காணப்படுகின்ற திட்ட முறைமையை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (ஏ) | சமுர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் 04 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான உற்பத்தி கிராமங்களை அமுல்படுத்துவதற்கு வழங்கப்பட்ட மொத்த நிதியேற்பாட்டுத் தொகையான ரூபா 65,214,952 தொகையில் செயற்திட்டம் நிறைவேற்றப்படாமையின் காரணமாக ரூபா 33,142,728 நிதியேற்பாட்டுத் தொகை அதாவது 51 சதவீத சேமிப்புக் காணப்பட்டது. | பொருட்களின் விலை உயர்வடைந்து சென்றமை, நிர்மாண பொருட்களில் காணப்பட்ட பற்றாக்குறை, ஒப்பந்தகாரர்கள் முன்வராமை, பாதகமான காலநிலை மற்றும் காலம் போதியளவில் இல்லாமை போன்ற காரணங்களினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் செயற்திட்டத்தை செயற்திறனாக நிறைவேற்று வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | சப்பிரிகமக் செயற்திட்டத்தின் கீழ் இப்பாகமுவ பிரதேச செயலகத்தில் மேல் வல்பொல முதல் வெவகெதர வரையான வீதிக்கு கொங்கிறீட் இடுவதற்காக நியமத்தின் பிரகாரம் 30 கல் கியூப்களும், 17 மணல் கியூப்களும், 610 சீமெந்து | சகல குறிப்புக்களும் சம்பவ திரட்டு புத்தகங்களில் குறிப்பிடப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தின் போது மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போ செயற்திட்டம் தொடர்பான சகல விபரங்களையும் | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் செயற்திட்டம் தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கை மற்றும் குறிப்புக்கள் உரிய பிரகாரம் பேணிச் செல்லல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | மூட்டைகளும் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அபிவிருத்தி உத்தியோகத்தரின் சம்பவத் திரட்டு புத்தகத்தின் பிரகாரம் 01 கல் கியூப், 03 கியூப் மணல் மற்றும் 200 சீமெந்து மூட்டைகள் மாத்திரம் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சம்பவ திரட்டு புத்தகத்தில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரிவு பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (ஓ) | 02 இலட்சம் சமுர்த்தி குடும்பங்களின் கேந்திர மயப்படுத்தப்பட்ட முழுமையான குடியிருப்புக்களை வழங்கும் பொருளாதாரத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் 05 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 166,653,664 நிதியேற்பாடுகளில் ரூபா 71,038,365 செலவிடப்பட்டு மிகுதி நிதியேற்பாடு ரூபா 95,615,299 பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கட்டுநிதி கிடைக்காமை, கொரோனா தொற்றுநோய் நிலைமை, வழங்குனர்கள் கூறுவிலையை வழங்காமை, பொருட்களின் பற்றாக்குறை மற்றும் நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமை இதற்காக தாக்கமளித்திருந்தது. | வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | 02 இலட்சம் சமுர்த்தி குடும்பங்களை கேந்திரமாகக் கொண்ட முழுமையான வீட்டு வசதிகளுடன் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்தில் இருக்கின்ற சமுர்த்தி நலனாளிகளை வலுவூட்டியதன் பின்னர் நலனாளிகளிடமிருந்து சமுர்த்தி உதவிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய பொருள் உதவி பெற்ற நலனாளிகள் சமுர்த்தி நிதி உதவியை நீக்குவதற்காக பிரிவுகளின் கிராமிய குழுக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | பிரதேச செயலகப் பிரிவில் இருக்கின்ற சமுர்த்தி நலனாளிகளை வலுப்படுத்தியதன் பின்னர் முறையான பிரகாரம் இனங்கண்டு அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சினால் 2017 ஆம் ஆண்டின் போது 10 பிரதேச செயலகங்களில் சிறிய ஆடைத் தொழிற்சாலை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா | பொல்கஹவெல, குருணாகல் என்ற இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் பயிற்சியினை வழங்கியதன் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கும் போது அனேகமாக நடைமுறைரீதியான | விளைவற்றுக் காணப்படுகின்ற இயந்திரம் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| 122,264,445 பெறுமதியான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தாதிருந்ததுடன் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | பிரச்சினைகள் ஏற்பட்டிருந்ததுடன் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் எழுந்த நியாயமான நடைமுறை பிரச்சினைகளின் அடிப்படையில் சகல நிலையங்களும் தற்காலிகமாக மூட வேண்டி ஏற்பட்டது. | வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தால் 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் 7 ஆவது நோக்கமான எல்லோராலும் செய்யக்கூடிய நம்பிக்கை நிலைபேறான மற்றும் நவீன வலுசக்தி வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக தற்போது காணப்படுகின்ற மின்சார சிக்கல்களுக்கு தீர்வாக நவீன வலுசக்தி மூலங்களுக்கு பிரவேசித்தல் போன்ற அத்தியவசிய நோக்கங்களுக்காக எந்தவொரு நிதியேற்பாடும் ஒதுக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் செயலாற்றல் பூச்சிய பெறுமதியைக் கொண்டிருந்தது. | நில மட்டத்தில் பொருத்தப்பட்ட 1,000 சூரிய சக்தி உற்பத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியேற்பாடு ஒதுக்க்பபடாமையால் ஆண்டின் இறுதியில் செயலாற்றல் பூச்சிய பெறுமதியைக் கொண்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இயலுமான வரை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பன்னல பிரதேச செயலகப் பிரிவில் ஹமன்கல்ல மற்றும் தம்பகந்த கிராம உததியோகத்தர் பிரிவுகளில் கருங்கல் மற்றும் கிரவல் அகழும் 02 இடங்கள் தொடர்பாக பல வருட காலம் முதல் பொது மக்களின் முறைப்பாடு மற்றும் எதிர்ப்பு கிடைத்திருந்த போதிலும் அந்த பொது மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக எந்தவொரு தீர்வும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கிரவல் வெட்டுவதற்கு எதிர்ப்பு காண்பித்து பிரதேசவாசிகளினால் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததடன் அதன் தீர்ப்பு இதுவரை பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | அனுமதியற்ற அகழ்வு தொடர்பாக காணப்படுகின்ற பொது மக்கள் முறைப்பாடுகள் மற்றும் எதிர்ப்புக்களுக்கு தீர்வு காண்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாரம்மல, இப்பாகமுவ, பண்டுவாஸ்நுவர (மேற்கு), மற்றும் கொபெய்கனே பிரதேச செயலகப் பிரிவுகளில் சிரேஷ்ட நிலையில் இரண்டு உத்தியோகத்தர்களினதும், மூன்றாம் நிலையில் 05 உத்தியோகத்தர்களினதும் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | நாரம்மல பிரதேச செயலகத்தில் கணக்காளர் பதவியில் பதிற்கடமை கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இப்பாகமுவ, பண்டுவாஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவுகளில் இடமாற்றம் மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற சந்தர்ப்பங்களின் போது வெற்றிடங்கள் காணப்படவில்லை. | பிரதேச செயலகங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத மொழிபெயர்ப்பாளர் உத்தியோகத்தர் பதவிக்காக மூன்று பிரதேச செயலகங்களுக்கு 03 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | மொழிபெயர்ப்பாளர் பதவி அங்கீகரித்துக் கொள்ளப்படல் வேண்டும். |